**பச்சிலைப்பள்ளி பிரதேச சபை**

**கிளிநொச்சி மாவட்டம்**

**1.** நிதிக் கூற்றுக்கள்

**1.1** நிதிக் கூற்றுக்களைச் சமர்ப்பித்தல்

மீளாய்வாண்டிற்கான நிதிக் கூற்றுக்கள் 2014 மார்ச் 31 இல் கணக்காய்விற்காக சமர்ப்பிக்கப்பட்டிருந்ததுடன் முன்னைய ஆண்டிற்கான நிதிக் கூற்றுக்கள் 2013 மார்ச் 28 இல் கணக்காய்விற்காக சமர்ப்பிக்கப்பட்டிருந்தது. ஆண்டிற்கான கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை 2014 டிசம்பர் 15 இல் சபையின் தவிசாளருக்கு வழங்கப்பட்டது.

**1.2** அபிப்பிராயம்

இந்த அறிக்கையின் 1.3 ம் பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்களின் தாக்கத்தினைத் தவிர்த்து பச்சிலைப்பள்ளி பிரதேச சபையின் 2013 நிதியாண்டு திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமையினையும் அத் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினையும் பொதுவாக ஏற்றுக் கொள்ளப்பட்ட கணக்கீட்டுத் தத்துவங்களுக்கு இணங்க நிதிக்கூற்றுக்கள் உண்மையானதும் நியாயமானதுமான நிலையைத் தருகின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

1.3 நிதிக்கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்

**1.3.1** கணக்கீட்டுக் குறைபாடுகள்

நிதிக்கூற்றுக்களில் அவதானிக்கப்பட்ட கணக்கீட்டுக் குறைபாடுகள் சொத்துக்கள் மற்றும் செலவினங்கள் தொடர்பில் பின்வரும் அட்டவணையில் காட்டப்படுகின்றன.

| நிதிக் கூற்றுக்கள் மீதான தாக்கம | வருமானம் | | செலவினம் | |
|---|---|---|---|---|
| | சந்தர்ப்பங்களின் எண்ணிக்கை | பெறுமதி<br>ரூபா | சந்தர்ப்பங்களின் எண்ணிக்கை | பெறுமதி<br>ரூபா |
| அதிகரித்துக் கூறல்கள் | 01 | 231இ870 | 01 | 231இ870 |

**1.3.2** கணக்காய்விற்கான சான்றுகளின்மை

தேவையான தகவல்கள் கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்படாமையால் ரூபா.39இ200 பெறுமதியுடைய 01 கொடுக்கல் வாங்கலை கணக்காய்வின்போது சான்றுறுதிப்படுத்த முடியாதிருந்தது.

**2.** நிதி மற்றும் செயற்பாட்டு மீளாய்வு

**2.1.** நிதிசார் விளைவுகள்

சமர்ப்பிக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின்படி மீளாய்வாண்டிற்கான சபையினுடைய நிதிப்பெறுபேறுகள் மீண்டுவரும் செலவினத்திலும் கூடிய வருமான மிகையாக ரூபா 1இ910இ691 விளைந்திருப்பதுடன் நேரொப்பான முன்னைய ஆண்டுடன் ஒப்பிடும் போது மீண்டுவரும் செலவிலும் கூடிய வருமான மிகையாக ரூபா.338இ519 விளைந்திருந்தது.

**2.2 நிதிசார் கட்டுப்பாடு**

பாதீட்டு மதிப்பீடானது சரியான முறையில் தயாரிக்கப்படாமையால் பாதீட்டு வருமானத்திற்கும் உள்ளவாறான வருமானத்திற்கும் இடையே ரூபா 2இ304இ512 வேறுபாடு ஏற்பட்டதுடன் பாதீட்டு செலவினத்திற்கும்

உள்ளவாறான செலவினத்திற்கும் இடையே ரூபா 1இ507இ139 வேறுபாடு ஏற்பட்டுள்ளமை கணக்காய்வில் அவதானிக்கப்பட்டுள்ளது.

## 2.3 வருமான நிர்வாகம்

### 2.3.1. மதிப்பிடப்பட்ட வருமானம் உள்ளபடியான வருமானம், நிலுவை வருமானங்கள்

தவிசாளரினால் சமர்ப்பிக்கப்பட்டவாறு மீளாய்வாண்டு தொடர்பான மதிப்பிடப்பட்ட வருமானம், உள்ளபடியான வருமானம் நிலுவை வருமானங்கள் மீதான தகவல்கள் கீழே தரப்பட்டுள்ளன.

| வருமான விடயம் | மதிப்பிடப்பட்டது | உள்ளபடியானது | திசெம்பர் 31 இல் உள்ளவாறான திரண்ட நிலுவைகள் |
|---|---|---|---|
| | ரூபா 000 | ரூபா 000 | ரூபா 000 |
| இறைகளும் வரிகளும் | - | 03 | - |
| குத்தகை வாடகைகள் | 4இ612 | 4இ489 | - |
| அனுமதிப்பத்திரக் கட்டணங்கள் | 200 | 283 | - |
| வேறு வருமானங்கள் | 17இ950 | 20இ291 | 1இ714 |
| | **22இ762** | **25இ066** | **1இ714** |

### 2.3.2 வருமான பாதிப்பு

சபையின் எல்லைக்குட்பட்ட ஆதனங்கள் தொடர்பாக ஆதனவரி மதிப்பீடு செய்யப்பட்டு அறவிடப்படாமையால் சபையின் வருமானத்தில் பாதிப்பு ஏற்பட்டுள்ளது.

2.3.3 .முத்திரைத் தீர்வைக் கட்டணம்

--------------------------------------

2010ஆம் ஆண்டு தொடக்கம் டிசம்பர் 2013ஆம் ஆண்டு வரையான காலப்பகுதியில் காணிப்பதிவாளர் நாயகத்திடமிருந்து பெறப்படவேண்டிய முத்திரைத்தீர்வைக் கட்டணம் ரூபா 989இ350 அறவிட நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

## 2.4 இணக்கமின்மைகள்

------------------------

பின்வரும் சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவ தீர்மானங்களுடன் இணங்காமைக்கான சந்தர்ப்பங்கள் கணக்காய்வில் அவதானிக்கப்பட்டுள்ளன.

| சட்டங்கள், விதிகள் மற்றும் நிதிப்பிரமாணங்களுடனான தொடர்பு | விபரம் |
|---|---|
| பொதுநிர்வாக உள்நாட்டலுவல்கள் அமைச்சின் 10 ஒக்டோபர் 1990 திகதியிட்ட 41.ஃ.90 இலக்க சுற்றுநிருபம். | சபையின் 07 வாகனங்களுக்கு எரிபொருள் நுகர்வுப் பரீட்சிப்பு மேற்கொள்ளப் பட்டிருக்கவில்லை |
| இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் நிதி திட்டமிடல் அமைச்சின் செயலாளரின் கணக்காய்வு முகாமைத்துச் சுற்றுநிருப இல னுஆயு.ஃ.2009 (1) ஆம் திகதி 09.06.2009 | மீளாய்வாண்டிற்கு குறைந்தது 04 கணக்காய்வு முகாமைத்துவக் கூட்டம் நடாத்தப்பட்டிருக்க வேண்டுமெனக் குறிப்பிட்டபோதும் அவ்வாறான கூட்டமேதேனும் நடாத்தப்பட்டிருக்கவில்லை. |
| இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் பெறுகை வழிகாட்டி கைநூல் பிரிவு 5.4.12 | பெறுமதி சேர்க்கப்பட்ட வரி (ஏயுவு) சபையினால் செலுத்தப்பட்டபின்னர் அதன் விபரங்கள் அடுத்த மாதம் 15ம் திகதிக்கு முன்னர் உள்நாட்டு இறைவரித் திணைக்களத்திற்கும் பிரதியை கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்கும் அனுப்பப்பட்டிருக்கவில்லை. |

## 2.5 அறவிடப்படாத வருமானங்கள்

------------------------------------

## 25.1 தொலைத்தொடர்பு கோபுரத்துக்கான கட்டணங்கள்

------------------------------------------------------------

17.04.2009 திகதியிடப்பட்ட 1597∴.8 இலக்க விசேட வர்த்தகமானி அறிவித்தலின் பிரகாரம் சபையின் எல்லைக்குள் அமைக்கப்பட்ட 01 தொலைத்தொடர்பு கோபுரத்திற்குரிய கட்டணங்களான பின்வருவனவற்றை அறவீடு செய்ய நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. விபரங்கள் வருமாறு.

1. அபிவிருத்தி அனுமதிப்பத்திரம் வழங்கல்
2. பூர்வாங்கத்திட்டமிடல் அனுமதி
3. இசைவுச்சான்றிதழின் வழங்குகைகள்
4. மேவுதல் அங்கீகாரம்

## 2.5.2 பெறப்படவேண்டிய கணக்குகள்

-------------------------------------

அரசிறைக்கடனாளிகள் கணக்கில் ரூபா 114,097 பெறுமதியான அரசிறைக்கடனாளிகள் குறித்த காலப்பகுதியில் மீளப்பெறப்படாது தொடர்ந்தும் அறிக்கையிடும் திகதிவரை அரசிறைக்கடனாளிகள் கணக்கில மீதியாகக் காணப்படுகின்றது.

## 2.6 சொத்துக்களின் முகாமைத்துவம்

--------------------------------------

## 2.6.1 பயன் படுத்தப்படாத வங்கி நடைமுறைக் கணக்கு மீதி

-------------------------------------------------------------------

சபையினது பெயரில் இலங்கை வங்கி கணக்கில் ரூபா.17,853 நிதியானது கடந்த 05 வருடங்களுக்கு மேலாக பயன்படுத்தப்படாது இருந்து வருவது கணக்காய்வில் அவதானிக்கப்பட்டுள்ளது.

### 2.6.2 மனித வளங்கள்

சபைக்குரிய 15 ஆளணி வெற்றிடங்கள் நிரப்பப்பட்டிருக்காமையினால் சபையினது அபிவிருத்தித் திட்டங்கள் பாதிப்படைந்து காணப்படுகின்றது. சபையால் ஆளணி வெற்றிடங்களை நிரப்புவதற்கு தொடர் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

### 2.6.3 உரிமைமாற்றம் செய்யப்படாத வாகனங்கள்

16 வாகனங்கள் சபையினது பெயருக்கு உரிமை மாற்றம் செய்யப்படாமல் சபையிடம் உள்ளமை கணக்காய்வின் போது அவதானிக்கப்பட்டுள்ளது.

## 2.7 ஒப்பந்த நிர்வாகம்

### 2.7.1 செயற்திட்டங்களைச் செயற்படுத்துவதில் காலதாமதம்

சபையினால் நடைமுறையாண்டில் செயற்படுத்தவென பாதீடு செய்யப்பட்ட செயற்திட்டங்களில் ரூபா 784,570 பெறுமதிக்கு மதிப்பீடு செய்யப்பட்ட 08 செயற்திட்டங்கள் சில்லறைக் கடனாளிகள் கணக்கில் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. அறிக்கையிடும் திகதிவரை திட்டங்கள் நிறைவு செய்யப்படவில்லை.

## 2.8 உள்ளகக் கணக்காய்வு

பிரதேச சபையினுள் உள்ளகக் கணக்காய்வு இன்மையால் உள்ளகக் கட்டுப்பாடுகள் உரிய முறையில் நடைமுறைப்படுத்தப்படாமை கணக்காய்வில் அவதானிக்கப்பட்டுள்ளது.

**2.9 திண்ம கழிவு முகாமைத்துவம்.**

**--------------------------------------**

சபையின் அதிகாரத்திற்குட்பட்ட பிரதேசத்திலிருந்து பெறப்படும் குப்பை கூளங்களை எரித்தல் மற்றும் புதைத்தல் செயற்பாடுகள் சபையால் மேற்கொள்வதேயன்றி கொம்பொஸ்ட் செயற்திட்டமொன்று செயற்படுத்தப்பட்டிருக்கவில்லை.

**3. முறைமைகளும் கட்டுப்பாடுகளும்**

---------------------------------------

பின்வரும் பகுதிகளில் விசேட கவனம் கோரப்படுகின்றது.

i. வருமான சேகரிப்பு

ii. நிலையான சொத்துக்கள்

iii. கணக்கீடு

iv. ஆளணி

v. நானாவித வைப்புக்கள்

vi. வரவு செலவுத்திட்டம்

vii. களஞ்சியப் பொருட்கள்

viii. பெறுகை நடைமுறை